நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை,' திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5 ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.128/2026
CNR.No.TNTS02-**000505-2026**
IN
குற்ற எண்.232/2021
in
CC.NO.790/2023

சூட்டுச்சாமி (வயது 21)
த/பெ. மாசாணம் ...மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர் அவர்கள்,
பாவூர்சத்திரம் காவல் நிலையம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பசும்பொன்செல்வகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

<u>உத்தரவு</u>

1. மனுதாரர்/எதிரி வாகன உரிமையாளர் என்றும், மேற்படி வழக்கில் காவல் துறையால் மனுதாரருக்கு சொந்தமான TN 72 BL 6131 என்ற பதிவெண் கொண்ட மினி டிப்பர் வாகனமானது பாவூர்சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.232/2021 U/s.179 IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்து இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி வாகனத்தின் அசல் RC புத்தகம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு தற்சமயம் வரை இந்நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது என்றும், தற்போது வாகனத்தின் உறுதி தன்மையை பரிசோதனை செய்யும் வகைக்காகவும் மேற்படி வாகனத்தின் RC புத்தகத்தை புதுப்பிக்கும் வகைக்காகவும், மேற்படி தென்காசி வட்டார போக்குவரத்து ஆய்வாளரிடம் வாகனத்தையும், வாகனத்தின் அசல் RC

புத்தகத்தையும் ஒப்படைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது என்றும், மேற்படி வாகனத்தின் அசல் RC அசல் புத்தகம் இந்நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் தற்சமயம் வாகனத்தின் அசல் RC புத்தகத்தை புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளது என்றும், எனவே மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN 72 BL 6131 என்ற பதிவெண் கொண்ட மினி டிப்பர் லாரியின் அசல் RC புத்தகத்தை இடைக்காலமாக ஒப்படைக்கும் படி மனுதாரர் மனு செய்துள்ளார்.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u> :-**

அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் அறிவிப்பில், வழக்கானது CC.No.790/2023 பிரகாரம் இந்நீதிமன்றத்தில் குற்றம் வனைய வேண்டி நிலுவையில் உள்ளது என்றும், வழக்கின் எதிரி தனது வாகனத்தின் RC புத்தகத்தினை தன்னிடம் ஒப்படைக்க வேண்டி மனு செய்துள்ளார். எதிரி தனது வாகனத்தினை பயன்படுத்தி அனுமதி சீட்டு இல்லாமல் M.Sand திருடியுள்ளார். மேலும் RC புத்தகத்தினை ஒப்படைக்கும்பட்சத்தில் வாகனத்தினை வேறு நபருக்கு விற்கவோ, அடகு வைக்கவோ கூடும், மேலும் வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் வாகனத்தினை ஆஜர்படுத்தாமல் இருக்க கூடும் என்பதாலும், RC புத்தகத்தினை மனுதாரரிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் மனுதாரர் ஏற்கனவே TN 72 BL 6131 என்ற பதிவெண் கொண்ட மினி டிப்பர் வாகனமானது மாண்புமிகு திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சி.ஆர்.எம்.பி. எண்.3679/2021ல் பிறந்த உத்தரவின்படி மேற்படி வாகனத்தை இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார். ஆனால் மேற்படி உத்தரவில் ஆர்சி புத்தகத்தை ஒப்படைக்கும்படி மட்டுமே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பில் மாண்புமிகு தென்காசி மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி வாகனத்தின் ஆர்.சி புத்தக்கத்தை இடைக்காலமாக ஒப்படைக்க மனு செய்து மேற்படி மனுவானது FIR is pending before Judicial Magistrate Court, Tenkasi. More over The RC Book also kept under the custody of Judicial Magistrate Court, Tenkasi. Under the circumstances how this petition for seeking return of RC Book before this court is maintainable என திருப்பப்பட்டுள்ள மனு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், தற்போது மேற்படி

வாகனத்தின் அசல் ஆர்சி புத்தகம் மட்டும் இந்நீதிமன்றத்தில் இருந்து வரும் நிலையில் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று (FC) பெறும் வகைக்கு மனுதாரருக்கு மேற்படி வாகனத்தின் அசல் ஆர்சி புத்தகம் தற்காலிகமாக தேவைப்படுவதாக கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், இவ்வழக்கானது நிலுவையில் இருந்து வரும் நிலையில் வழக்கு விசாரணைக்கு மேற்படி வாகனம் தேவைப்படும் என்பதால் அதனை இந்நீதிமன்றத்தில் பிணையத்திற்காக திரும்ப தாக்கல் செய்ய மனுதாரர் கோரியவாறு மனுதாரர் வசம் மேற்படி அசல் ஆர்சி புத்தகத்தினை தற்காலிகமாக ஒப்படைத்து அதை ஒரு மாத காலத்திற்குள் (06.04.2026) மனுதாரர் மீண்டும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்படி ஆர்சி புத்தகத்தினை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**இறுதியாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் ஆர்.சி. புத்தகத்தை ஒப்படைக்க தேதி 06.04.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:02:06 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.